இணைப்பு IV

(12ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 235 கான விடையைக் காண்க.)

(அ) ஆம்.

(ஆ) சுற்றுலா வழிக்காட்டிகளுக்கான பயிற்சித் திட்டம் நடப்பு ஆண்டு மார்ச்சு—ஏப்ரல் திங்கள்களில் (1983) நடத்தப் பட்டது. சுற்றுலாத் துறை இந்தப் பயிற்சி திட்டத்திற்கு இதுவரை செலவழித்த தொகை ரூ 28,000 ஆகும். இப் பயிற்சிக்கான காலம் ஆறுவாரங்களாகும். பயிற்சிக்கு தமிழ் நாடு முழுவதிலும் ஆர்வமுள்ள பட்டதாரி இளைஞர்கள் மனு செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் நேரடித் தேர்வு மூலம் முப்பது நபர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டனர். இப் பயிற்சி மதுரை மாநகரில் நடைபெற்றது. பயிற்சியில் தேர்ந்த ஒவ்வொருவருக்கும் பயிற்சி காலத்தில் ரூ. 300 உதவித் தொகை வழங்கப்பட்டது. இப் பயிற்சி திட்டத்தின் கீழ் சுற்றுலா தொழில் சம்பந்தப்பட்ட பொருள் உரைகள் நிகழ்த்த பல்வேறு துறையைச் சார்ந்த அலுவலர்களும் கல்லூரி விரிவுரையாளர்களும் அழைக்கப் பட்டனர். இத்துறையின் அழைப்பேற்று உரை நிகழ்த்தியவர் களுக்கு ரூ. 100 விதம் அன்பளிப்புத் தொகை வழங்கப்பட்டது. மத்திய அரசின் சுற்றுலாத் துறை இப்பயிற்சிக்கு ரூ. 5,000 மானியம் அளித்து பயிற்சி திட்டத்திற்கும் ஒத்துழைப்பு அளித்தது. பயிற்சியின் இறுதியில் கலந்து கொண்ட நபர்களுக்கு தேர்வு வைக்கப்பட்டது. அதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு அடையாள அட்டை வழங்கி சுற்றுலா வழிக் காட்டிப் பணியில் செயல்படுவர்.

(இ) கடந்த மூன்றாண்டு காலத்தில் 1983-ல் மட்டுமே இப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப் பயிற்சிக்கு முப்பது பேர்கள் நேரடித் தேர்வு மூலம் எடுத்துக் கொள்ளப்பட்டனர். அவர் களில் இறுதியில் நடைபெற்ற தேர்வில் தேறியவர்கள் 2 பெண் கள் உள்பட 24 பேர்கள். இவர்கள் தென் மாவட்டங்களில் பணியாற்றுவார்கள்.